என்பது இயலாது. அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் பொதுமக்களிடம் இருந்து வரும் கோரிக்கையின் பேரிலோ அல்லது நமது துறையின் அதிகாரிகளின் பரிந்துரைகளின் பேரிலோ புதிதாக விரைவுப் பேருந்துகள் விடப்படும்.

**திரு. எம். இராதாகிருட்டிணன் :** தலைவரவர்களே, சில நேரங்களில் விரைவுப் பேருந்துகள் காட்டுப் பகுதிகளிலே நின்றுவிடுகின்றன. அப்படிப் பட்ட நேரங்களில் பிரயாணிகள் ஓய்வு எடுத்துக்கொள்கின்ற வகையிலே அந்தப் பகுதிகளில் ஒரு டென்ட் போட்டுக் கொடுத்தால் வசதியாக இருக்கும். அதற்கு ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கனம் உறுப்பினர் அவர்கள் தெரி வித்ததைப் போல புகார் ஏதும் வரவில்லை. போகின்ற இடங்களில் 'காம்ப்' போடுவதுபோல போகவேண்டும் என்று அரசாங்கத் துறையிலே இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இப்போது செல்கின்ற இரவு நேர விரைவுப் பேருந்துகள் 'லக்சுரி கோச்சு'களாக இல்லை என்று தெரிகிறது. ஆகவே, விரைவுப் பேருந்துகளை லக்சுரி கோச்சுகளாக மாற்றும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நம்முடைய விரைவுப் பேருந்துகள் இந்த லக்சுரி கோச்சு வகையைச் சேர்ந்தவைதான். இதைவிட இன்னும் கொஞ்சம் வசதியான முறையில் 'டூரிஸ்ட் லக்சுரி கோச்சு'கள் இருக்கின்றன. அரசாங்கம் இப்போது அப்படிப்பட்ட இரண்டு பேருந்துகளை தயாரிக்க யோசனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சரவர்கள் பதில் சொன்னபோது, விரைவுப் பேருந்துகள் வசதியான லக்சுவரி கோச்சுகளாக இருக்கின்றன என்று சொன் னார்கள். அந்த வண்டிகளிலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று இரண்டு சீட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த சீட்டுகளில் ஒருவர் தான் உட்கார முடிகிறது. இருவர் இருப்பதற்கு வசதியாக இல்லை. ஆகவே சீட்டுகளை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சட்டமன்ற உறுப்பினர்கள் பெரு மைக்குரியவர்களே தவிர பெருத்தவர்கள் அல்ல என்பது என் கருத்து. இப் போது விரைவுப் பேருந்துகளின் மூலம் அதிகமான லாபம் வருவதால், பயணி களுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில், முன்பு 58 சீட்டுகளாக இருந்தது இப்போது 48 சீட்டுகளாக—அதாவது 2/2 என்ற முறையில் குறைக்கப்பட் டிருக்கிறது. ஆகவே, இப்போது நல்ல வசதியாக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

*1973 பிப்ரவரி 13]*

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அரசாங்க விரைவுப் பேருந்துகளுக்கு 2/2 என்ற முறையில் சீட்டுகளை அமைத்திருப்பதைப்போல எல்லா பஸ்களுக்கும் அந்த ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசாங்கம் அதை கொள்கை அளவில் ஏற்று செயல்பட்டு வருகிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** இந்த இரவு நேர விரைவுப் பேருந்துகளில் பயணிகள் தூங்கிக்கொண்டே செல்வதற்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தூங்குவதும் தூங்காததும் பயணிகளைப் பொறுத்தது.

**திரு. எம். தேவராசன் :** தனியார் துறையினரால் கோவைக்கும் பெங்களூருக்கும் இரவு சொகுசு பஸ்கள் விடப்படுகின்றன. அதையெல்லாம் ஒழித்துவிட்டால் அரசாங்க பஸ்களுக்கு இன்னும் அதிகமான லாபம் வரும். ஆகவே அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவைகளைத் தடை செய்யவோ அல்லது ஒழிக்கவோ வேண்டிய தேவை இல்லை. அந்த சொகுசு பஸ்களை நாமே எடுத்துக்கொள்ளலாம் என்று சட்டம் வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது விரைவுப் பேருந்துகள் வழியிலே நின்றுவிட்டால் அடுத்து வருகின்ற பேருந்துகளில் ஏறிச்செல்ல வசதி இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு மாறான சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. திண்டிவனத்திலே ஒருமுறை பஸ் நின்றுவிட்டதனால் பயணிகள் மிகவும் சிரமப்பட்டது (மணியடிக்கப்பட்டது) எனக்குத் தெரியும். அப்படி பிரயாணிகள் சிரமப்படாமல், அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகவாவது அங்கே ஒரு விடுதி கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டதாக அரசாங்கத்திற்கு தகவல் இல்லை. கிட்டத்தட்ட ஒரு மணி, இரண்டு மணி நேரத்திற்கு ஒரு பேருந்து வரக்கூடிய வகையிலே இப்போது வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி பேருந்து எதுவும் வராமல் பயணிகள் கஷ்டப்பட்டதாகத் தெரியவில்லை. இருப்பினும் திண்டிவனத்தில் பயணிகள் ஓய்வு எடுத்துக்கொள்வதற்காக ஒரு விடுதியை அமைக்கலாம் என்று அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் அது ஓய்வு எடுத்துக்கொள்வதற்கே அல்லாமல் பஸ் பிரேக்டவுன் ஆகும் என்பதற்காக அல்ல.

**திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை:** சென்னையில் இருந்து நாகர்கோயிலுக்கு கிளம்புகிற மின்வேக துரித பஸ்கள், சென்னையைவிட்டுக் கிளம்பினால் விழுப் புரம் போய்த்தான் நிற்கின்றன. அங்கும் சரியான முறையில் உணவு உட் கொள்ள வசதி இல்லாத காரணத்தினால் நாகர்கோயில் போகிற பயணிகள் கிட்டத்தட்ட 16 மணி நேரம் பட்டினி கிடக்க வேண்டிய நிலைதான் இருக் கிறது. அப்படியன்றி நடுவில் நிற்கும் இடங்களில் பயணிகள் உணவு உட் கொள்ள நல்ல உணவு விடுதியையும் ஏற்படுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் உணவு விடுதி சரியாக இல்லை என்பது விழுப்புரத்திற்கே இழுக்கு. இது போன்ற மின்னல் வேக துரித பஸ்கள் உணவுவிடுதி வசதியுள்ள இடங்களில் தான் நிறுத்தப்படுகின்றன. ஆனால், யார் யாருக்கு என்ன ருசியான உணவு தேவை என்பது அவர்களுடைய தனி பிரச்சினை. இதுபோல் மின்னல்வேக துரித பஸ்கள் நிற்கும் இடங்களில் எல்லா வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டி உணவு விடுதியை ஏலத்திற்கு விடலாமா என்பதும் பரிசீலனையில் இருக் கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** விழுப்புரத்தில் இருக்கிற ஓட்டல் யாருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய நிலைமையில் இல்லை. ஆகவே அங்கே நல்லதொரு ஓட்டல் ஏற்பட தக்க வசதி செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இது ஒருவருடைய சுவையைப் பொறுத்த கேள்வி. பஸ்ஸைப் பொறுத்த கேள்வி அல்ல.

**திரு. நா. வெ. குருசாமி:** மதுரையில் இருந்து குமிழிக்கும், திண்டுக் கல்லில் இருந்து குமிழிக்கும் நடுவில் தேனி போன்ற வியாபார ஸ்தலங்கள் இருக்கிற காரணத்தினால் இரவு நேரங்களில் பஸ்விட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தேவைப்படுமானால் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அதனைப் பரிசீலனை செய்யும்.

**திரு. நா. வீராசாமி:** இரவு நேர பஸ்களில்—இரயில் ஸ்லீப்பர்கோச் போட்டிருப்பதுபோல—ஒரு ஸ்லீப்பர்கோச்சையும் இணைத்தால்—இரண்டு பங்கு கட்டணம் கூட வாங்கலாம்—வருவாயும் பெருகும், பயணிகளுக்கு வசதி யாக இருக்குமே, இதுபற்றி பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நீண்டதூரப் பயணத்திற்கு வசதி யாக இரயிலும், அருகில் உள்ள நகரங்களுக்கு, கிராமங்களுக்கு எல்லாம் போக வசதியாக பஸ் போக்குவரத்தும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த பஸ் களில் படுக்கையைப் போட்டு—நான்கு இருக்கைகளை எடுத்துக்கொள்வது மக் களுக்கு நன்மை தரக்கூடியதாக இருக்காது.